# பாரத பிரதமரின் பூட்டான் பயணம்

மார்ச் 22, 2024

பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் முதல் இரண்டு நாட்கள் 2024 மார்ச் 22 முதல் 23 வரை பூட்டானுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார். இதையடுத்து அவர் 2024 மார்ச் 22 அன்று பாரோ சென்றடைந்தார். இந்தியாவிற்கும் பூட்டானுக்கும் இடையே வழக்கமான உயர்மட்ட பரிமாற்றங்கள் மற்றும் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற மத்திய அரசின் நோக்கத்திற்கு ஏற்ப இந்தப் பயணம் அமைந்துள்ளது.

2. பாரோ விமான நிலையத்தில் பூட்டான் பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே அவர்கள் பாரத பிரதமரை அன்புடன் வரவேற்றார்.

3. இந்தப் பயணத்தின் போது, பூட்டான் மன்னர் திரு. ஜிக்மே கேசர் நம்கியேல் வாங்சுக் மற்றும் இதற்கு முன்பு பூட்டானின் மன்னராக இருந்த திரு. ஜிக்மே சிங்கே வாங்சுக் ஆகியோரை பாரத பிரதமர் சந்திக்க உள்ளார். பூட்டான் பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே அவர்களுடனும் பாரத பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

4. திம்பு நகரில் இந்திய அரசின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள அதிநவீன மருத்துவமனையான கியால்ட்சுன் ஜெட்சுன் பெமா தாய் சேய் நல மருத்துவமனையையும் பாரத பிரதமர் திறந்து வைக்கவுள்ளார்.

**திம்பு**
**மார்ச் 22, 2024**